செய்தி வெளியீடு எண்: 760 நாள்:14.10.2020

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் :</u>

இன்று (14.10.2020) சென்னை, எழிலகத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு காணொளி அரங்கில், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் **“2020–2021–ஆம் ஆண்டிற்கான 2வது தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியக் கூட்டம்”** காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு உறுப்பினர் செயலர் திரு. அனில் மேஷ்ராம், இஆப., முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, மற்றும் தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி, கூட்டத்தில் கீழ்காணும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் குறித்து மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.** தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பு மற்றும் கனஉலோகங்களால் பாதிக்கப்பட்டுள்ள மண்ணினை மீட்டெடுப்பதற்கான நுண்ணுயிர்

தொழில்நுட்ப தொகுப்பினை வளர்த்தல், 2. வெட்டிவேர் புல் தொழில் நுட்பத்தைக் கொண்டு தோல் பதனிடும் மாசடைந்த பகுதிகளை மீட்டெடுத்தல் மற்றும் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள கரிமங்களை பக்குவப்படுத்துதல், 3. பழங்கள், காய்கறிகள் மற்றும் மூலிகைகளிலிருந்து வைரஸ் தொற்று நோய்களைத் தடுத்தல், 4. நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க நுண்ணுயிர் ஊட்டச்சத்துமிக்க காய்கறி பானக் கட்டிகளைத் தயாரித்தல், 5, நகர்ப்புற உள்ளூர் பகுதிகளில் உள்ள மரங்களை செயற்கைக்கோள் தரவு அடிப்படையில் மதிப்பிடுதல், 6. செங்குத்து காய்கறி விவசாயத்தை நகர்ப்புற சமூகங்களில் மேம்படுத்துதல் மற்றும் 7. தமிழ்நாட்டில் மனித – யானை மோதலை தனிப்பதற்கான உத்திகள்.

2011–2012 முதல் 2020–2021 வரை மொத்தம் 63 ஆராய்வுகள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள துறைகள் நிலப்பயன்பாடு (19), நீர் (8), வாழ்வாதாரம் (5), விவசாயம் (9), சுற்றுச்சூழல் (7), ஈரநிலம் (4), பருவநிலை மாற்றம் (5), நகரமயமாக்கல் (3), வனம் (2) மற்றும் கழிவு மேலாண்மை (2) அவற்றில் 42 ஆராய்வுகள் நிறைவடைந்துள்ளன. மீதம் பதினைந்து (15) ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. 6 புதிய ஆராய்ச்சி ஆய்வுகள் 2020–2021 முதல் சுற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் (12) பயிலரங்கங்கள்/கருத்தரங்கம் மேலே குறிப்பிட்டுள்ள காலவரையரைக்குள் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள துறைகள் பருவநிலை மாற்றம் (3), நீர் (2), விவசாயம் (6), மற்றும் கழிவு மேலாண்மை (1) 2011 – 2012 முதல் 2018–2019 வரை அனுமதிக்கப்பட்ட ஆய்வுகளில், நிறைவுசெய்யப்பட்ட 34 ஆய்வுகளுக்கான சுருக்கப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

அவற்றில் சில ஆராய்ச்சி ஆய்வுகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறப்பம்சங்கள் பின்வருமாறு.

1. உலகளாவிய மற்றும் இந்தியாவிலுள்ள மற்றும் நகரங்களைக் குடிசைகளற்ற நகரமாக மாற்றுவதற்கான வழிமுறைகள் மற்றும் புத்தாக்க முறைகள் பற்றி ஆராய்ச்சி ஆய்வு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS) எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி ஆய்வு "குடிசைகளற்ற நகரங்கள்" ஆராய்ச்சி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சில விபரங்கள் பின்வருமாறு:

- 2001–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நகரத்தின் மக்கள் தொகையில் 17.4 சதவிகித (1 மில்லியனுக்கும் அதிகப்படியான மக்கள்) குடிசைப்

பகுதிகளில் வாழ்ந்தனர். ஆனால், இந்த விகிதம் 2011–ல் 28.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் எட்டு (8) பகுதிகள் மீள் குடியேற்றப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவை 1. அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், 2. உதயசூரியன் நகர், வியாசர்பாடி, 3. சாலைமாநகர், ஓட்டேரி, 4. சாஸ்திரி, புளியந்தோப்பு. 5. முத்தமிழ் நகர், கொடுங்கையூர், 6. கேட்ராக் சாலை, வேளச்சேரி, 7. ராஜரத்தினம் நகர், கொடுங்கையூர் மற்றும் 8. கண்ணகி நகர், துரைப்பாக்கம்.
- 1985–ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்தவொரு குடிசைப் பகுதிகளும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதிகளானது அடிப்படை சேவைகளின் போதாமை வெளியேற்றம் மற்றும் மீள் குடியேற்றம் போன்ற பாதிப்புகளை எதிர்கொள்கின்றன.
- இடப்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான நிலப் பற்றாக்குறை.
- சமூக பங்களிப்பு இல்லாமல் பயனுள்ள மற்றும் நிலையான குடிசை மேம்பாடு ஏற்படாது என்பதால், பங்கேற்பு

வழிமுறைகளை ஆதரிக்கும் விதத்தில் நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அரசு தீவிர நேரத்தையும், வளங்களையும் முதலீடு செய்ய வேண்டும். இவ்வகையான நடவடிக்கைகள் மூலமாக பிரேசில், தாய்லாந்து, பூனே மற்றும் அகமதாபாத் போன்ற நாடுகளில் குடிசை மேம்பாட்டு முயற்சிகள் பாராட்டத்தக்க வகையில் வெற்றி அடைந்துள்ளதாக அறியப்படுகிறது.

**2.** ‘‘விவசாய துறையில் மண் மற்றும் கனிம வரைபடம் மற்றும் உயிரி எரிப்பொருளை மேம்படுத்துதல், கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்” என்ற தலைப்பில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி ஆய்வில் பின்வரும் பரிந்துரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- பயிர் எச்சங்கள், மாட்டு சாணம், வரப்புகளிலிருக்கும் களைகள் மற்றும் பயிர் பகுதி போன்ற பண்ணைக் கழிவுகள் திறம்பட சேகரிக்கப்பட்டு நல்ல தரமான எருவை உற்பத்தி செய்ய பாதுகாக்கப்பட வேண்டும்.

- உற்பத்திச் செலவைக் குறைக்க முடிந்தபோதெல்லாம் பண்ணை வளாகத்திலேயே கரிம உரங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- கரிம உரங்கள் கொண்டு மண் பதப்படுத்தப்பட வேண்டும்.
- மண்ணின் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்க பசுந்தாள் உர பயிர்கள் மற்றும் பயிர் முறை ஆகியவை சேர்க்கப்படலாம்.

3. “ஈர நிலம் முன்னுரிமைக்கான அளவுகோல்கள் மற்றும் தமிழ்நாட்டின் ஈர நில கண்காணிப்புக்கான கட்டமைப்புகள்” என்ற தலைப்பில் சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையம் (SACON) நிறுவனத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஆய்வின் நோக்கங்களாவன:- 1. ஈரநிலங்களை வரையறுத்தல், 2. துல்லியமான ஈர நிலத்தின் ஆதிக்க மண்டலத்தின் வரைபடம், 3. ஈர நிலத்தின் அளவு.

விண்வெளி பயன்பாட்டு மையம் (இஸ்ரோ), அகமதாபாத் ஆய்வின்படி மொத்த ஈரநில பரப்பளவு 15.26 மில்லியன் ஹெக்டேர் ஆகும். இது நாட்டின் புவியியல் பரப்பளவில் 4.63 சதவிகிதம் ஆகும். தேசிய ஈரநிலத்தின் வரைப்பட கையேடு 2011–ன்படி, தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் 6.92 சதவிகிதம் ஈரநிலங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த

ஈரநில வளங்கள் வடகிழக்கு பருவமழையின் பருவகால மழையால் நிரப்பப்படுகின்றன.

சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள், நிலப் பயன்பாட்டு முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பல்லுயிர் மதிப்புகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 141 ஈரநிலங்களில் ஒவ்வொன்றிற்கும் ‘‘ஈரநில ஆரோக்கிய நிலை’’ கணக்கீடு செய்து அதன் அடிப்படையில் மதிப்பெண்ணை சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையம் Salim Ali Centre for Ornithology and Natural (SACON) ஈர நிலங்கள் தரவரிசைப்படுத்தியுள்ளது. இந்த தரவரிசை மதிப்பெண்ணின் அடிப்படையில் 04 ஈரநிலங்களுக்கு (கரூர் மாவட்டத்தில் உள்ள உப்பிடமங்கலம் மற்றும் வெள்ளியணை ஏரி, சேலம் மாவட்டத்தில் உள்ள பனமரத்துப்பட்டி ஏரி மற்றும் சென்னை மாவட்டத்தில் உள்ள மடிப்பாக்கம் ஏரி) மிக அவசர மற்றும் உடனடி கவனம் தேவை, 40 ஈரநிலங்களுக்கு முன்னுரிமை தேவை, 25 ஈரநிலங்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் மற்றும் 32 ஈரநிலங்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் கூட்டத்தின் நிறைவுரையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வார்த்தைகளான **“மக்களால் நான் மக்களுக்காகவே நான்”** என்னும் சொல்லுக்கு ஏற்றவாறு தன் மக்கள் குடிசைகளில் வாழும் நிலை மாறி பொருளாதார ரீதியாக பலவீனமாக உள்ள பிரிவினர்களுக்கு வீடு வழங்கி குடிசைகளில் வாழும் 15 இலட்சம் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் எட்டு (8) பகுதிகள் மீள் குடியேற்றப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டு மக்களுக்காக வழங்கப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் மாண்புமிகு முதலைமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் சீரிய ஆட்சியில் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த உலர்நில வேளாண் வனவியல் முறையில் வளர்ச்சி பெற கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமகுடி, இராமநாதபுரம் மற்றும் திருவாடனை

தாலுக்காக்களில் இவ்வாரியம் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

நீரின் முக்கியத்துவம் கருதியும் விவசாயிகளின் தேவைகளையும் அறிந்த விவசாயிகளின் நண்பனான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பாலார் நீர்வடிப் பகுதியில் நீர்நிலைகளின் நிலம் மற்றும் நீர் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு நீர்நிலைகளில் உள்ள நெகிழிகளை அகற்றி பின்னர் நுண்ணிய உயிரினங்களைக் கொண்டு மாசுபடுத்திகள் மற்றும் அதிகப்படியான கரிம பொருட்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார் என்று மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் கூட்டத்தில் உரையாற்றிய முனைவர். பி. ஜெபர்லின் பிரபினா, முனைவர் கே. சுகன்யா, முனைவர். வி. வாணி, முனைவர். மீனாட்சி, திருமதி. மீட்டா பேனர்ஜி, இ.வ.ப., முனைவர். கே.ஆர். விஜயலதா, முனைவர். சிவகணேசன் மற்றும் முனைவர். கோபிநாத் அவர்களைப் பாராட்டினார்.

உறுப்பினர் செயலர்,
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**